கூறினார்கள். ஆனால் அவரை "சஸ்பெண்டு" செய்து விசாரணை செய்யலாம் என்று அதற்கு ஒருவரை "சின்டிகேட்" நியமித்திருக்கிறது. ஆகவே சட்டப்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் மாணவர்கள் அவர் வேலையை விட்டு நீக்கப்படுகிற காலம் வரையிலும் வேலைநிறுத்தம் செய்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், துணை வேந்தர் அவர்களும் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லுகின்ற அளவுக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதை எல்லாம் செய்கிறார்கள். அந்த ஆசிரியரின் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் துணை வேந்தர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்த முயற்சி நேற்றும் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே சட்டத்திற்கு உட்பட்ட முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். எதை எதை செய்ய இயலுமோ அதை எல்லாம் இந்த அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது. இன்று காலை கூட நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே பேசி இதற்குத் தக்க முடிவு எடுக்கச் சொல்லியிருக்கிறேன். அந்த ஆசிரியருடைய கருத்தையும் கேட்டு, அவர் ராஜினாமா செய்ய ஆயத்தமாக இருக்கிறார்களா என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே எடுக்கவேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிற காரணத்தால இந்த அவையினுடைய நடவடிக்கைகளை ஒற்றிவைத்து அதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : In view of the fact that the Hon. Minister has stated that the matter is being dealt with, I hope that Dr. Hande is not pressing the matter.

Dr. H. V. HANDE : I am not pressing the matter.

(ii) கோயம்புத்தூரில் தேசியக் கொடியையும், அரசமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியையும் எரித்தது.

Mr. SPEAKER : The next adjournment motion is by the Leader of the Opposition. He has given notice of the following adjournment motion :

"That the business of the House do stand adjourned to discuss an urgent matter of public importance, namely the incident of the burning of the National Flag and part of the Constitution of India in Coimbatore and Madurai on 26th February 1968."

I would request the Leader of the Opposition to explain how this matter involves more than the ordinary administration of the law, because we have got a special law in our State known as the Prevention of Insults to National Honour Act, 1957. According to section 4 of that Act " Whoever wilfully burns or desecrates or insults the Indian National Flag shall be punished with imprisonment of either description for a term which may extend to three years or with fine or with both. " We have got also another section dealing with insult to the Constitution of India. In view of the fact that we have got a special law in our State to deal with the burning of the National Flag or of the Constitution, I would like to know how the subject falls outside the ordinary administration of the law.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கும்படியான இந்த ஒத்திவைப்புப் பிரேரணை சட்டத்தில் இருக்கிற ஒரு காரியம். இருந்தாலும்கூட கொந்தளிப்பான ஒரு நிலையில், அராஜகம் செய்யும்படியான ஒரு நிலையிலே கூட சர்க்கார் போதிய நடவடிக்கைகளை எடுத்ததாகத் தெரியாத ஒரு காரணத்தாலே இதைக் கொண்டு

வந்திருக்கிறேன். எல்லா இடங்களிலும், நான் டெல்லிக்குச் சென்றிருந்த காலத்திலே கூட, இதுமாதிரியான துர்போக்கான, துரோகமான, மிகவும் மன்னிக்க முடியாத சாதாரண காரியம் இல்லை இது என்ற பேச்சு இருந்தது. இது திட்டமிட்டிருந்து செய்திருந்த நேரத்திலேயும் போலீசார்கள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை. 2,000 பேர்கள் ஒரு இடத்திலே கூடி இந்தக் காரியத்தைச் செய்யப் போகிறோம் என்று சொன்னால் அதைத் தடுக்காமல் இருக்கும் நிலை ஏற்பட்டது ; சட்டத்திற்குப் புறம்பான துரோகமான சூழ்நிலை ஏற்பட்டும் இந்தமாதிரி இருந்திருக்கிறார்கள் என்று நான் தெரிவித்துக் சொல்கின்றேன். 2,000 பேர் ஒரு பெரிய பார்க்கிலே கூடி இந்தமாதிரிக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள் என்பது சாதாரண விஷயம் அல்ல. தேசத் துரோக விஷயங்கள் சாதாரண விஷயம் அல்ல. ஆகவே, இது நிச்சயமாக அவசரமும் அவசியமுமான காரியமாக இருப்பதாலே, இதை விவாதிக்க, சர்க்கார் என்ன சொல்லுகிறார்கள் என்பதை அறிய இந்த அவையின் மற்ற அலுவல்களை அவசியம் ஒத்திவைக்க வேண்டுமென்ற என்னுடைய பிரேரணையை வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த தேசீயக் கொடியை எரித்தல், அரசியல் சட்டத்தை எரித்தல் போன்ற காரியங்களுக்கு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று —அவைத் தலைவர் அவர்கள் கூறியதைப் போன்று—சட்டம் இயற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றங்களைச் செய்தவர்கள் மீது முறைப்படியான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த முறையில் அவர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு பதிவு செய்கின்ற அத்தகைய சூழ்நிலையும் ஏற்பட்டது. ஆனால் எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பது ஆங்காங்கு இருக்கிற சூழ்நிலைகளைப் பொறுத்தது. ஆங்காங்கு இருக்கிற சூழ்நிலைகளைப் பொறுத்துத்தான் காவல் துறையினர் தக்க முறைகளை அனுசரிக்க வேண்டும். அந்த வகையில் பல்வேறு முறைகள் இருக்கின்றன. முன்கூட்டி தடுப்பது, 105-வது செக்ஷன்படி நடவடிக்கை எடுப்பது அல்லது அவர்கள் காரியத்தை செய்தபின் தடுப்பது, செய்யும்பொழுது தடுப்பது, செய்ததற்குப் பின் தடுப்பது போன்ற பல முறைகள் இருக்கின்றன. எந்த முறையை எடுத்தால், அதைவிட அதிகமான விபரீதங்கள் ஏற்படாதோ அந்த முறையில் சட்டம் ஒழுங்கு கெடாத அளவில் காவல் துறையினர் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தக் குற்றச்சாட்டை செய்தவர்கள் யாரும் விடுபட்டு விடுவார்கள் என்று சொல்ல இயலாது. அந்த முறையிலே முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றி டெல்லியிலே கேட்கப்பட்ட கேள்விக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், "தமிழக அரசினர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், நாங்களும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறோம்; எந்தச் சந்தர்ப்பத்தில் எந்த நடவடிக்கை எடுப்பது உசிதமோ அதை தமிழக அரசு எடுத்துக்கொண்டு வருகிறது" என்று இந்தப் போக்கை ஆதரிக்கிற வகையில் பதிலளித்து முடிவு எடுத்துள்ளார்கள். தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று அவர்கள் முடிவு செய்திருப்பதை பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, சட்டத்திற்குப் புறம்பாக காரியங்கள் செய்பவர்கள் மீது கூடுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அந்த நடவடிக்கைகளின் மூலம் விபரீதமான விளைவுகள் ஏற்படாத அளவில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒன்று அல்ல. இந்த சபையினுடைய நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதின் மூலம் எந்தவிதமான பரிகாரமும் காணுவதற்கில்லை. ஆனால், முறைப்படியான, சட்டத்திற்கு உட்பட்டுத்தான் பரிகாரம் காண வேண்டும். ஆகவே, இது ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது விவாதிக்க வேண்டிய பிரச்சினை அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லாது சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியது. ஏற்கனவே, இந்தக் காரியம் நடைபெறப் போகிறது என்று

1968 பிப்ரவரி 29] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

தெரிந்திருந்தும் காவல் துறையினர் என் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. இவ்வளவு பெரிய ஒரு காரியம் —தேசீயக் கொடியை எரிக்கப் போகிறோம் என்கிற விஷயம்—பொது இடத்திலே விளம்பரம் செய்யப்பட்டது. அதையும் இந்த சர்க்கார் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இந்த சர்க்காருக்கு நடவடிக்கை எடுக்க சக்தி இருந்தும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இதைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளாத அந்த காவல் துறை மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே, நிச்சயமாக இந்த அவையை ஒத்திவைத்து, இதை விவாதிக்க வேண்டுமென்பது என்னுடைய வற்புறுத்தலாகும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்தக் கொடியை எரிப்பதற்கு முயன்றவர்கள் யாரும் தங்களுடைய பெயரை முன்கூட்டியே இன்னார் இன்னார் எரிக்கப் போகிறோம் என்று திட்டவட்டமாக அறிவிக்கவில்லை. முன்கூட்டியே அவர்களை கைது செய்யவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே கூட, இன்னார் இன்னார் அரசியல் சட்டத்தை எரிப்பார்கள் என்று அறிவித்து திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டம் நடத்தியது. அப்பொழுது காவல் துறையினர், அரசியல் சட்டம் கொளுத்தப்படுகிற வரையிலே பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு, கொளுத்தப்பட்ட பிறகு வழக்குப் போட்டார்கள். அதற்குக் காரணம் பின்னால் வழக்கு பலமாக இருக்கவேண்டுமென்பது. இது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதை மாத்திரம் இதற்கு விளக்கமாக தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இன்னொரு விளக்கம் என்ன இருக்கிறது என்று கேட்டால், எரிக்கப் போகிறேன் என்று சொல்கிறவர்களை எரிக்கப்போகிற கடைசி நிமிஷத்தில் கூட யாராவது சொல்லி எரிக்காமல் தவிர்த்துவிடலாம். எனவேதான், கடைசி வரையில் செயல் முறையில் அது நிகழ்கிறதா, இல்லையா என்று பார்க்க வேண்டிய கடப்பாட்டில் காவல் துறையினர் இருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையை ஒட்டி பல சூழ்நிலைகள் இருக்கிற காரணத்தினால் காவல் துறையினர் உசிதப்படி நடவடிக்கை எடுக்கிறார்கள். நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும் என்பதை மட்டும் கூறிக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : I am concerned only with giving a ruling in this matter. I am not entitled to express any opinion as to what had happened. The Hon. Leader of the Opposition has stated something and the Hon. Leader of the House has stated some other thing. But what I am concerned with is whether it involves more than the ordinary administration of the law. If there is a law to deal with it, then I have to hold that this is not a fit matter for an adjournment motion. It may be that in other States there is no law of this kind. In this State we have got a law enacted for this purpose. A person who commits an offence of the nature mentioned by the Hon. Leader of the Opposition is liable to imprisonment which may extend to three years. So, I am unable to hold that this involves something more than the ordinary administration of the law. It may well be that in other States, if somebody attempts to burn the National Flag, it may be a fit matter for an adjournment motion. So far as our State is concerned, having an enactment which specially provides for dealing with this kind of offence, it is well within the ordinary administration of the law. Therefore I rule that this is not a suitable matter for an adjournment motion.

There is also another reason. In about ten minutes or so, we will start general discussion on the budget. The Hon. Leader of the Opposition or somebody belonging to his party may start the discussion in the course of which the matter could be dealt with.

For these two reasons I hold that this matter is not fit to be taken up as an adjournment motion.

4. கவன ஈர்ப்பு.

சென்னை நகரில் மஞ்சக் காமாலே நோயும், தடுப்பு நடவடிக்கைகளும்.

Dr. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the prevalence of Infective Hepatitis (Jaundice) in and around the City of Madras and the necessity to trace the source of the infection and to take immediate steps to prevent the spread of it.

The Hon. Thiru. S. J. SADIQ PASHA : Mr. Speaker, Sir, on receipt of information regarding the occurrence of Infective Hepatitis (Jaundice) in Madras City, immediate action was taken by the officers of the Public Health Department and by the Corporation of Madras.

There were reports of a few cases of Infective Hepatitis (Jaundice) in the Press in the first week of December 1967, though the Corporation of Madras did not receive any official reports from the hospitals then. However, it is not uncommon for this disease to occur during the months of October to December. This is a disease carried by a virus and the infection is likely to occur through food, water and other drinks. Since there is no preventive inoculation, the public were advised through a notification in the Press by the Corporation of Madras to see that they boiled and cooled the water before they drank. The need to take hot foodstuffs and drinks and to avoid cool drinks and unwholesome food was also brought out. Further, the water mains in the affected localities were given extra chlorine injections. The Circle Health Officers and Sanitary Inspectors were also instructed to visit all the affected areas and to take all prophylactic measures to arrest the spread of infection.

The infection was noticeable in II and III Circles only during December 1967. Later some cases were reported in January from IV Circle also. The total number of cases reported was 92 during December 1967 and 46 during January 1968 making a total of 138 cases.

The infection has since declined considerably. The situation is under control. Strict vigil is however being kept by the Corporation Staff.

Dr. H. V. HANDE : Sir, I actually live in VI Circle and I saw a number of cases and so I gave notice of a Call Attention Motion. I want to know whether the Government have found out the source of infection and from what point it exactly came. Of course, I commend all the good measures taken by the Corporation of Madras in that respect but they are only curative and prophylactic measures